எப்படியும் தமிழைப் படிக்காத சூழ்நிலை ஏற்படக் கூடாது என்பதனாலும், தமிழ், மாநில மொழியாக இருப்பதனாலும், சமஸ்கிருதம், அராபிக் மொழிகளைப் படிக்க வாய்ப்பு ஏற்பட வில்லை. பல இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கிற காரணத்தால், அது ஆராயப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : During the last session of the Assembly the Hon. Chief Minister was kind enough to give an oral assurance about safeguards to linguistic minorities. He promised to follow the decisions of the Zonal Council scrupulously but yet is continues to be an oral assurance. May I request the Hon. Minister for Education to give an official status to the oral asurance ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தெலுங்கு மொழி படிக்கிறவர்களாக சிறுபான்மையோர் இருந்து, பதினைந்து பேர்களுக்கு மேல் முன்வரும் நிலைமை இருந்தால், அவர்களுக்கு அந்த மொழியில் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும் என்ற நிலைதான் இருக்கிறது. அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

திரு. நா. காசிராமன் : தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இரண்டு மொழிகள் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அது தவிர என்னென்ன பிற மொழிகள் கற்றுக்கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளை இந்த அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலில் சொன்ன படி, சிறுபான்மையோராக இருந்து, தங்களுடைய தாய் மொழியாக இருந்து, அந்த மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பதினைந்து பேருக்குக் குறையாமல் வந்தால், அவர்களுக்கு அந்த மொழியில் பாடங்கள் கற்றுத் தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுகிறது. 74 பள்ளிகளில் வேற்று மொழிகளின் மூலம் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. சிறுபான்மையோராக இருந்து, தாய் மொழியாக இருந்து, அதில் படிக்க 15 பேர்கள் வந்தால், அவர்களுக்கு அந்த மொழி ஆசிரியரை நியமித்துத்தர இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது.

Vanaspathy industry at Vadalur

* 67 Q.—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to start an industry in the co-operative sector at Vadalur in South Arcot district for manufacturing soap, vanaspathi, etc., by utilising groundnut and its products ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1968 ஆகஸ்ட் 21]

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாய விளைபொருள்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில், அப்படி ஏதேனும் ஆரம்பிக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏராளமாக சோப் உற்பத்தியாகும் காரணத்தால், சோப் தொழிற்சாலை, 'பான்டு லிஸ்ட்' டில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் புதிதாக லைசென்ஸோ, மற்றவையோ தரும் நிலை இல்லை. ஆகவே, சோப் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடிய நிலை இல்லை என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

திரு. மா. பா. சாரதி : மணிலாப் பயிர் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய வடார்க்காடு மாவட்டத்தில், ஏற்கனவே வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு, அது நடத்தப்பட முடியாமல் போய்விட்டதை உத்தேசித்தும், வடார்க்காடு மாவட்டத்தில் நிலக்கடலை அதிகமாக உற்பத்தி ஆவதை உத்தேசித்தும், அந்த மாவட்டத்தில் ஒரு வனஸ்பதித் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பிருந்தது என்ன காரணத்தினால் நடத்தப்பட முடியாமல் போயிற்று என்பதைக் கண்டுபிடித்து, அந்தக் காரணங்களையெல்லாம் நிவர்த்திக்க வாய்ப்பு ஏற்படுமானால், மறுபடியும் அது பற்றி ஆலோசிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட வனஸ்பதித் தொழிற்சாலை எந்த அளவிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலை நடைபெறுகின்ற முறைக்கும் நெய்வேலியில் வனஸ்பதித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, The Madras Vanaspathi factory at Villupuram had been closed down. என்றுதான் விவரம் தரப்பட்டிருக்கிறது. அது மூடப்பட்டதற்கு என்ன காரணங்கள் என்பதைக் கண்டறிந்து, உள்ளபடியே தொழிற்சாலையை நடைபெறச் செய்யவேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கமாகும். அதற்கு ஏதாவது ஆதரவு அளிப்பதற்கோ, அல்லது அதை ஊக்குவிப்பதற்கோ வழிவகை இருந்தால், செய்யலாம். அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால், ஆராய்ந்து விவரங்கள் தரலாம்.

Price preference scheme

* 68 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government propose to introduce 'price subsidy scheme' for the manufactured articles purchased by Government Departments from private industries; and

(*b*) if so, the details thereof?